கலைஞர் 100

1924 - 2023

பதிவஞ்சல் ஒப்புதலுடன்

| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் பிறப்பிப்பவர் – திரு.வீ.செந்தமிழ்ச்செல்வன் | |
|---|---|
| ந.க.எண். 6052/2023/க.3 | நாள். 23.09.2023 |

பொருள் :: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலகு - தஞ்சாவூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - போட்டித் தேர்வு - தொகுதி IV-இல் அடங்கியப் பணிகள் - 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டு - நேரடி நியமன முறையில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வானவர்கள் - தஞ்சாவூர் ஊரக வளர்ச்சி அலகிற்கு தேர்வு செய்யப்பட்டு ஏற்பளிக்கப்பட்ட பட்டியல் பெறப்பட்டது – பணிநியமனம் வழங்கி ஆணையிடல்.

படிக்கப் பட்டவை ::
(1) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு சென்னை கடித எண். 1863/PSD-D1/2023, நாள். 18.08.2023.
(2) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அழைப்பாணை ந.க.எண். 6052/2023/க.3, நாள். 05.09.2023.

------------

**ஆணை**

முதலாவதாகப் படிக்கப்பட்ட பட்டியலின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி-IV-இல் அடங்கிய போட்டித் தேர்வுகள் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்டம் ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் நபருக்கு அவருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் தற்காலிக பணி நியமனம் வழங்கி இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்) | பணிநியமனம் செய்யப்படும் பதவி/ அலுவலகம் |
|---|---|---|
| 1. | REG NO:1904005306<br>DEVAYANI A<br>NO. 430, MARIYAMMAN KOVIL STREET, THENNAMANADU POST, ORATHANADU TALUK, THANJAVUR DISTRICT - 614625 | இளநிலை உதவியாளர்,<br>உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) அலுவலகம்,<br>தஞ்சாவூர் உபகோட்டம்.<br>(காலியாக உள்ள பணியிடத்தில்) |



2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதம் மூலம் பெறப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் இந்நியமன ஆணை வழங்கப்படுகிறது.

1. இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் தெரிவித்துள்ள விபரங்களின் அடிப்படையிலேயே இப்பணி நியமனம் வழங்கப்படுகிறது. தெரிவாளரின் வயது, கல்வி, சாதிச்சான்று மற்றும் இதர சான்றிதழ்களின் விவரங்கள் தவறானவை என தெரிய வந்தால், இப்பணிநியமனம் முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
2. தெரிவாளர் பணியில் சேரும் முன்னர், அங்கீகாரம் பெற்ற குடிமுறை உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் (Civil Assistant Surgeon) தகுதிக்கு குறையாத தமிழ்நாடு அரசு மருத்துவரிடம், உரிய படிவத்தில் பெறப்பட்ட உடற்தகுதிச் சான்றினை பணிநியனம் செய்யப்பட்டுள்ள அலுவலகத் தலைவரிடம் சமர்ப்பித்து, பின்னர் பணியில் சேருதல் வேண்டும்.
3. நியமனம் செய்யப்படும் தெரிவாளர், பணியில் சேரும் முன் தேர்வாணையத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு கடிதம், கல்விச் சான்றுகள் மற்றும் இதர சான்றுகளின் நகல் ஒன்றினை பணியேற்கும் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
4. தெரிவாளர் பணியில் சேரும் போது வேலை வாய்ப்பு அலுவலக பதிவு அட்டையினை (அசல்) பணிநியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
5. தெரிவாளர் நியமன ஆணை பெற்றுக்கொண்ட பின்னர் 1 (ஒரு) மாத காலத்திற்குள் பணியில் சேராமலும், தகவல் அளிக்காமலும் இருப்பின், அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகளின்படி, தெரிவாளரின் பெயரை தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய தேர்வாணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும்.

   "That no kind of representation regarding joining time will be entertained and that of he/she fails to join duty with in the specified time and at the specified place, his/ her name will be deleted from the approved list of candidates selected to the post of Junior Assistant included in Combined Civil Services Examination-IV (Group). As per para 8A if the Tamil Nadu Public Service Commission – Rules of procedure the name of such candidate(s) may be deleted by the appointing authority themselves and the fact of the deletion may be intimated to the TNPSC and the consequent vacancies may be added to the future estimate"
6. இந்நியமனம் தொடர்பாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திலிருந்து தற்காலிக தெரிவானது உறுதி செய்யப்பட்டு வரப்பெற்றதன் அடிப்படையிலும், தெரிவாளரின் கல்விச் சான்றுகள்/ தமிழ்வழி கல்விச்சான்று/ மாற்றுத்திறனாளிக்கான சான்றுகளின் மீது மெய்த்தன்மை அறிக்கைப் பெறப்பட்ட பின்னரும் தெரிவாளரின் பணி இளநிலை உதவியாளர் பணிநிலையில் வரன்முறை செய்யப்படும்.

   " The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group-IV)"
7. தெரிவாளருக்கான பணிமூப்பானது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தகுதியின் அடிப்படையிலான பட்டியலின்படியும் நடப்பிலுள்ள விதிகளின்படியும் நிர்ணயம் செய்யப்படும்.
8. தெரிவாளர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்படி பணிவரன்முறை செய்யப்படும் நாள் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டாண்டு காலத்தில் தகுதிகாண்பருவ காலத்தினை பூர்த்தி செய்ய வேண்டும். இவர் மனநிறைவளிக்கத்தக்க வகையில் தகுதிகாண்பருவ காலத்தை பூர்த்தி செய்த பின்னரே பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படுவார்.

9. தெரிவாளர் தகுதிகாண்பருவ காலத்திற்குள்

(அ) தெரிவாளரின் பணி வரன்முறை செய்யப்பட்ட பின்னர், இம்மாவட்டத்தின் முதுநிலை வரிசைப்படி பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுவர். தெரிவாளர் இப்பயிற்சியில் கலந்துகொண்டு அனைத்து பாடங்களிலும் முழுமையாக தேர்ச்சிப் பெற்று பயிற்சியினை நிறைவு செய்திருக்க வேண்டும்.

(ஆ) அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017-ன்படி தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்குரிய கீழ்க்காணும் 4 (நான்கு) துறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெற வேண்டும்.

| S.No. | Test code | Department Exam - Subject Name |
|---|---|---|
| 1. | 008 | Tamil Nadu Panchayat Act 1994 and the rules and Constitution of India |
| 2. | 010 | Scheme Administration |
| 3. | 166 | Panchayat Development Account Test |
| 4. | 172 | The Tamil Nadu Government Office Manual Test |

10. தெரிவாளர் தகுதிகாண்பருவ காலத்திற்குள் மேற்கண்ட பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகளில் தனிப்பட்ட காரணங்களினால் தேர்ச்சிப் பெறாத பட்சத்தில், 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டப்பிரிவுகளின்படி பணியிலிருந்து நீக்கம் செய்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. தெரிவாளர் மேற்கண்ட காரணங்களால் பணியினை தொடர இயலாத நேர்வில், பயிற்சி காலத்தில் பெறப்பட்ட ஊதியம் மற்றும் படிகளை அரசுக்கு திரும்ப செலுத்துவதற்கு சம்மதம் தெரிவித்து, உரிய படிவத்தில் இரண்டு பிணையதாரர்களின் ஒப்புதலுடன் பிணைமுறை எழுதித்தர வேண்டும்.

12. தெரிவாளரின் அடிப்படை ஊதியம், 2017-ஆம் ஆண்டு ஊதியக்குழு விதிகளின்படி, ரூ.19500-62000 என்ற ஊதியக்கற்றையில் நிலை-8 வ.எண். (1)-இல் பணியில் சேரும் நாள் முதல் ஊதியம் நிர்ணயம் செய்து உரிய படிகளுடன் வழங்கப்படும்.

13. இப்பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் "பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்" கீழ் (Contributory Pension Scheme) கொண்டுவரப்படுவர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

23/09/2023.

பெறுநர்

தொடர்புடைய தேர்வாளர்.

நகல் - செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், TNPSC சாலை, சென்னை - 600 003.

நகல் - இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சைதாப்பேட்டை, சென்னை-600 015.

நகல் - கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர்.

நகல் - முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நிறுவனம், பட்டுக்கோட்டை.

நகல் - உதவி செயற்பொறியாளர் (ஊ.வ.), தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் உபகோட்டம்.

நகல் - மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு/சிறுசேமிப்பு/), தஞ்சாவூர்.

நகல் - ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)/ (தணிக்கை), தஞ்சாவூர்.

நகல் - அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ/கி.ஊ), தஞ்சாவூர் மாவட்டம்.

நகல் - துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (த-பிரிவு/ ச-பிரிவு)/ கணக்குகள் பிரிவு),

நகல் - க.3 பிரிவு இருப்பு கோப்பிற்கு.